


# தலைப்பு: பாதை

வழங்கியோர்

நீ ! மனிதனின் இலக்கை நோக்கி
அழைத்துச் செல்லும் கைகாட்டி !

வாழ்க்கை ஓர் பயணம் !
அதில் மனிதனின்
இன்பம் துன்பம் பூவாய் புயலாய் மாற !
லாபமும் நஷ்டமும் தர !
மன வலிமையோடு ! நடை போடச் சொல்லும் திசைகாட்டி !

*கவிதாயினி சை.சபிதா பானு (காரைக்குடி)*

வெடித்து சிதறிய விண்கற்களின் பாதையில்
சுற்றி சுழலும் இந்த பூலோகம்...

இந்நிலை மறந்தே
இழிவான பாதையில்
இங்கு நாம் வாழ்கிறோம்...

பயணங்கள் பலவிதம்
பாதைகள் பலவிதம்
அனைத்தும் நமக்கு
வாழ்க்கை பாடம் ..

அன்புடன் வாழ்ந்தே
அகிம்சை பாதையில் நடப்போம்...

நேர்பட வாழ்ந்தே
வெற்றி பாதையில்
வீறு கொண்டு நடப்போம்...

*- முத்து இராஜசேகரன்*